சுருக்கம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் – பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதற்கென மானியம் மற்றும் வங்கிக் கடன் வழங்கும் திட்டம் – 2018–19–ஆம் ஆண்டுக்கான அரசு மானியம் – ஒப்பளிப்பு – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந1) துறை

அரசாணை (நிலை) எண்.25

நாள் 06.03.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி, மாசி 22

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 111, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(சிந1) துறை, நாள் 31.12.2007.
2. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரின் கடித ந.க. எண் பி4/1725/2018, நாள் 06.02.2019.
3. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித ந.க.எண். டி2/5828/2018, நாள் 13.02.2019

---

ஆணை

மேலே, முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதற்காக, வங்கிக்கடன் மற்றும் அதற்கு இணையான அதிகபட்சம் தலா ரூ.50,000/– அளவிலான 50 விழுக்காடு அரசு மானியம் வழங்கும் திட்டத்தை 2007–08–ஆம் ஆண்டில் ரூ.25.00 கோடி செலவினத்தில் செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நடப்பு நிதி ஆண்டிற்கு (2018–19) 13 மாவட்டங்களிலிருந்து மானியத்துடன் கூடிய நீர்ப்பாசன கடன் கோரி 400 விண்ணப்பங்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகதிற்கு வரப்பெற்றுள்ளதாகவும், அவற்றிற்கு வங்கிகளால் ரூ.4.00 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதில் 50% மானியத் தொகையாக ரூ.2.00 கோடியை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் விடுவிக்கப்பட வேண்டியுள்ளதால் அத்தொகையினை வழங்குமாறு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலே, மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், 2018–19–ஆம் நிதி ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் கடன் பெற்ற 400 பயனாளிகளுக்கு மானியத் தொகையாக ரூ.2.00 கோடியினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் மூலம் வழங்க உரிய ஆணைகள் வழங்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் பரிந்துரைத்தவாறு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும், பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், 2018–19 ஆம் நிதியாண்டில் நிலுவையில் உள்ள 400 பயனாளிகளுக்கு மானியத் தொகை வழங்க ரூ.2,00,00,000/– (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) மானியமாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே, பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும் :–

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 190 – பொதுத் துறை நிறுவனங்களுக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும் நிதியுதவி – மாநிலச்செலவினங்கள் – JA – பாசன வசதிக்காக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு விவசாயிகளுக்கு பாசன வசதிக் கடன் மானியம் வழங்க தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதியுதவி – 09 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

(த.தொ.கு. 2225 – 03 – 190 – JA –0931)"

6. மேலே, பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதி 2018–19–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கம் / இறுதி துணை மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. மேலே, பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை பெற்று தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்க பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இத்தொகை பணமாக வழங்கப்படாமல் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்க்காணும் தன் வைப்புக் கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் பற்றுவைக்கப்படவேண்டும். (shall be Credited to the following head of account by means of Cheque / Demand Draft drawn in favour of the P.D. Account of Tamil Nadu Backward Classes Economic Development Corporation)

K. வைப்பீடுகளும் முன்பணங்களும்
(b) வட்டி பெறாத வைப்பீடுகள்
8443 00 – உரிமையியல் வைப்புத் தொகைகள்
800 பிற வைப்புத் தொகைகள்
B.S.தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் வைப்புத் தொகைகள் (TABCEDCO)

(DPC 8443 00 800 BS 000E) (Receipts)
(DPC 8443 00 800 BS 0006) (Out go)

8. மேலும், இத்திட்டத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட தொகை உரிய நோக்கத்திற்காக விடுவிக்கப்பட்ட பின், எஞ்சிய தொகையை அரசுக் கணக்கில் திரும்ப செலுத்தவும், பயனீட்டு சான்றிதழை அரசுக்கு அனுப்பிவைக்குமாறும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை, நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.9654/ நிதி (பி,மிபி) / 2019, நாள் 05.03.2019–இல் பெற்று பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்

இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–5.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்
பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சென்னை–8.

இயக்குநர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை–5.

மாநில கணக்காயர், சென்னை– 9/18/35. (பெயரில்)

நகல்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.

நிதி (பிமிபி/பொ. நி. மா.க./வ.செ.பொ– I /II) துறை,
சென்னை–9.

அரசு செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை–9.

அரசு சிறப்புச் செயலாளரின் தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை , சென்னை–9.

இருப்பு கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

6/3/2019.
பிரிவு அலுவலர்.
06/03/19